**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**C.O.S. No. 19 / 2023**

**பி.வா.சா.1 / ஈஸ்வரன் / 01.02.2025**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு வாதியான வசந்த் அன் கோ நிறுவனத்தின் பங்குதாரர் ஆனந்துடன் எனக்கு நல்ல நெருக்கமான பழக்கம் உண்டு என்றால் சரிதான். அவரை எனக்கு கடந்த 10 வருடங்களாக தெரியும். நான் எம்பிஏ படித்துள்ளேன். நான் 2005ம் வருடம் எனது கல்லூரி படிப்பை முடித்தேன். நான் இந்துஸ்தான் யுனிலீவர் லிமிட் நிறுவனத்தில் என்ன பணியில் இருந்தேன் என்றால் டெரிட்டரி சேல்ஸ் ஆபிசராக பணிபுரிந்து வந்தேன். வாதி நிறுவனம் இந்துஸ்தான் யுனிலீவர் லிமிட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் என்றால் சரிதான். நான் யாருடைய பரிந்துரையின் பேரில் இந்துஸ்தான் யுனிலீவர் லிமிட் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தேன் என்றால் ராம்குமார் என்பவர் கொடுத்த அனுபவச் சான்றின் அடிப்படையில் பணியில் சேர்ந்தேன். எந்த ஆண்டு முதல் இந்துஸ்தான் யுனிலீவர் லிமிட் நிறுவனத்தில் பணியில் இருந்தேன் என்றால் 2015 முதல் 2024ம் ஆண்டு வரை சேல்ஸ் ஆபிசராக பணிபுரிந்தேன். இந்துஸ்தான் யுனிலீவர் லிமிட் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்களை மார்க்கெட்டிங்க செய்வது தான் எனது பணி என்றால் சரிதான். தற்போது நான் அந்த நிறுவனத்தில் பணியில் இல்லை என்றால் சரிதான். 29.12.2022ம் தேதியில் நான் இந்துஸ்தான் யுனிலீவர் லிமிட் நிறுவனத்தில் தான் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். வாதி என் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வாதி நிறுவனத்தில் நான் 29.12.2022ம் தேதி இந்துஸ்தான் யுனிலீவர் லிமிட் நிறுவனத்தால் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை ரூ.85,09,453/−மதிப்புக்கு 7 இன்வாய்ஸ்கள் மூலம் கொள்முதல் செய்துள்ளேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஈவே பில்கள் ஈஸ்வரன் உடுமலைபேட்டை என்ற பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். ஈவே பில்கள் மற்றும் இன்வாய்ஸ்களை ஜிஎஸ்டி அடையாள எண் இருந்தால் மட்டுமே generate செய்ய முடியும் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 ஈவே பில்களை பற்றி தெரிந்து கொண்ட பிறகு மேற்படி ஈவே பில்கள் தொடர்பாக ஜிஎஸ்டி கவுன்சிலில் வாதி நிறுவனத்திற்கு

எதிராக புகார் அளித்தேனா என்றால் இல்லை. நான் வேலை பார்த்த இந்துஸ்தான் யுனிலீவர் லிமிட் நிறுவனத்தின் சட்ட திட்டத்தின் படி கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரவு செலவு எதுவும் வைத்து கொள்ளக்கூடாது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி எண்.2 ல் சொல்லியுள்ளது போல் 29.12.2022 தேதியில் நான் திருப்பூருக்கு வரவில்லை என்பதாக காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேலும், 29.12.2022 ம் தேதியில் நான் ஓசூரில் வேலை செய்து வந்தேன் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேலம் ஆறுமுகசாமிநகரை சேர்ந்த சையது மீரா மொய்தீன் என்பவரை வாதிநிறுவனத்திற்கு நான் அறிமுகம் செய்து வைத்தேன் என்று என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் சரிதான். அவருடன் வாதி நிறுவனத்திற்கு வரவு செலவு இருந்ததா என்றால் இருந்தது. வாதி நிறுவனம் நான் கூறியவாறு சையது மீரா மொய்தீனிடம் வரவு செலவு செய்து கொண்டதாக கூறுவதற்கு இன்வாய்ஸ் ஆவணங்களை என் தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு சென்னை ஐசிஐசிஐ வங்கியில் சேமிப்பு வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த வங்கியில் எனக்கு வழங்கப்பட்ட காசோலையின் நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது **வ.சா.ஆ.14**. வா.சா.ஆ.14 ல் காணப்படும் கையொப்பம் என்னுடையது தான். அதில் குறிப்பிட்டுள்ள 29.12.2022 என்ற தேதி நான் எழுதவில்லை. இந்த காசோலையை நான் தான் வாதி நிறுவனத்திற்கு கொடுத்தேன் என்றால் சரிதான். அது ஜாமீனுக்காக கொடுத்தது ஆகும். மேற்படி காசோலை வரவுக்காக வங்கியில் செலுத்தப்பட்டு போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டுவிட்டது என்றால் சரிதான். எனக்கு வங்கியில் இருந்து சேதி வந்தது. இதுதொடர்பாக வாதி என் மீது குற்றவியல் விரைவு நீதிமன்றம், திருப்பூரில் வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் ஆஜராகியுள்ளேனா என்றால் ஆஜராகியுள்ளேன். குற்றவியல் விரைவு நீதிமன்றம், திருப்பூரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பற்றி இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 9 காசோலைகள்

கொடுத்ததற்கான காசோலை எண்கள் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் சையது மீரா மொய்தீனுக்கு பொறுப்பிற்காக காசோலை கொடுக்க வேண்டுமென வாதி என்னிடம் கேட்ட போது நான் மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வாதியிடம் நான் பொறுப்பிற்காக வழங்கியதாக கூறும் காசோலைகளுக்கு அத்தாட்சி எதுவும் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. நான் முதுநிலை பட்டதாரி என்பதால் காசோலைகளை கொடுத்திருக்க மாட்டேன் என்றும் உண்மைக்கு மாறாக 10 காசோலைகள் கொடுத்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் வாதி நிறுவனத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும், வாதி நிறுவனத்திற்கும் சையது மீரா மொய்தீனுக்கும் தான் வரவு செலவு நடந்துள்ளது என கூறும் நான் மேற்படி சையது மீரா மொய்தீனை வழக்கில் தரப்பினராக சேர்க்க நாளது வரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்களான ஈவே பில்கள் வாதி நிறுவனம் எனக்கு எதிராக போலியாக உற்பத்தி செய்யுள்ளது என கூறும் நான் மேற்படி ஆவணங்களை எதிர்த்து வாதி நிறுவனத்தின் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. இந்துஸ்தான் யுனிலிவர் லிமிட் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கணக்கில் வராத படி விநியோகம் செய்ய முடியாது என்றால் சரிதான். எனது முகவரி உடுமலைபேட்டை, புக்குளம், கதவு எண்.4/77, தந்தை பெயர் அப்பாச்சி ஆகும். என்னிடம் காட்டப்படும் 7 இன்வாய்ஸ்களில் கண்டுள்ள விலாசம் என்னுடையது தான் என்றால் சரிதான். அவைகள் தான் வாதி நிறுவனம் எனக்கு சப்ளை செய்ததற்கான இன்வாய்ஸ்கள் என்று சொன்னால் சரியல்ல. நிறுவனத்தில் சொற்ப விலைக்கு லாட்டுகள் வந்தால் அந்த பொருட்களை வாங்கி விற்பனை செய்யும் பழக்கம் எனக்கு உண்டு என்றால் சரியல்ல. நான் இந்துஸ்தான் யுனிலிவர் நிறுவனத்தில் வேலை பார்த்து கொண்டே அதிக வருமானம் ஈட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் கடந்த 29.12.2022ம் தேதி வாதி நிறுவனத்தில் வாதி பிராதில் கோரிய தொகைக்கு கம்பெனி பொருட்களை கொள்முதல் செய்துள்ளேன் என்றும் வழக்கிற்காக தற்போது அதனை மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஜிஎஸ்டி சட்டத்தின் படி பொருட்களை சப்ளை செய்பவர்களுக்கு தான் ஜிஎஸ்டி அவசியம் என்றும் பொருட்களை கொள்முதல் செய்பவர்களுக்கு ஜிஎஸ்டி பதிவு அவசியமில்லை என்று சொன்னால் அதுபற்றி

எனக்கு தெரியாது. நான் இந்துஸ்தான் யுனிலிவர் லிமிட் நிறுவனத்தில் இருந்து எந்த தேதியில் பணியில் இருந்து விலகினேன் என்றால் Resignation Letter ஐ பார்த்து தான் சொல்ல முடியும். நிறுவனத்திலிருந்து நானாக தான் பணியில் இருந்து விலகினேன். நான் மேற்படி நிறுவனத்தில் பணிபுரிந்த சமயத்திலேயே காசோலை மோசடி மற்றும் இந்த வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகள் தொடர்பாக வாதி நிறுவனம் என் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ள விவரத்திற்கு கம்பெனி நிர்வாகத்திற்கு தகவல் அனுப்பினேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் நான் பணிபுரிந்து நிறுவனத்திற்கு தெரிய வந்தால் என்னை கட்டாய பணி விடுப்பு செய்துவிடுவார்கள் என்ற எண்ணத்தில் நான் தானாகவே எனது வேலை ராஜினமா செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக திருப்பூர் சமரச மையத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு அவ்வாறு அழைப்பாணை வந்தது என்றும் அதை பெற்றுகொண்டேன் என்றும் வாதியுடன் செய்து கொண்ட பரிவர்த்தனை உண்மையானது என்பதால் தான் சமரச மையத்தில் ஆஜராகி மறுப்பு தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சமரச மையத்தில் ஆஜராகி மறுப்பு தெரிவிக்காத நிலையில் நான் இவ்வழக்கில் வாதிக்கு எதிராக கட்சி செய்துள்ள காரணங்கள் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 காசோலையை நான் தான் என் கைப்பட அதில் கண்டுள்ள அனைத்தையும் பூர்த்தி செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தீர்ப்புக்கு முன்பாக சொத்தை ஜப்தி செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு எண். 02/2023 ல் கண்டுள்ள சொத்தில் எனக்கு மூன்றில் ஒரு பாகம் உள்ளது என்றால் சரிதான். அந்த மனுவில் இந்த வழக்கு முடியும் வரை எனக்கு பாத்தியப்பட்ட பங்கை விற்கவோ வில்லங்கப்படுத்தவோ மாட்டேன் என்று பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் வாதி நிறுவனத்திற்கும் தான் வரவு செலவு இருந்தது என்றும் நான் சொல்வது போல் வாதிக்கும் சையது மீரா மொய்தீனுக்கும் வரவு செலவு இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மீது இருந்த நம்பிக்கையின் அடிப்படையில் வாதி ரூ.85,09,453/- மதிப்புள்ள பண்டங்களை சப்ளை செய்தார் என்று சொன்னால் சரியல்ல. பொறுப்பே ஏற்றாலும்

பொறுப்புக்காக யாரும் ரூ.85,09,453/– மதிப்பிற்கு பொறுப்பேற்க மாட்டார்கள் என்றும் நான் வாதியுடன் செய்த வரவு செலவுகளில் இருந்து அபலாபம் அடைய வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.02.01 19:38:36 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.